
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1307

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

72

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# கழகம் அமைத்த கட்டுமானம்!



*1986*-ஆம் ஆண்டு, இந்திய ஒன்றியத்தின் ஒரே ஆட்சிமொழியாக இந்தி இருப்பதை எதிர்த்து, தனது போராட்டத் திட்டத்தை அறிவித்த கழகம், அரசியலமைப்புச் சட்டத்தின் 17-வது பகுதியின் (PART XVII) சில பகுதிகளை நவம்பர் 17 அன்று எரிக்கும் களத்தில் இறங்கியது. போராட்டத்தில் ஈடுபட்ட கலைஞர், பேராசிரியர் உள்பட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழகத்தினர் மாநிலம் முழுவதும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 10 வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட நிலையில்தான், அவர்களை அன்றைய சபாநாயகர் பதவிநீக்கம் செய்தார். கலைஞர், 1983-ஆம் ஆண்டில், ஈழத்தமிழர் பிரச்சினைக்காகப் பதவியைத் துறந்திருந்த நிலையில், அவரை நீக்கவேண்டிய நெருக்கடி, அன்றைய சபாநாயகருக்கு ஏற்படவில்லை. இல்லையெனில், அவரையும் நீக்கியிருப்பார்.

நவம்பர் 17 அன்று, தலைவர்களின் கைதுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் மிகப்பெரிய கொந்தளிப்பு உருவானது. மாணவர்கள் வகுப்பறைப் புறக்கணிப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தின்போது 21 பேர் தீக்குளித்துத் தங்களின் உயிரை மாய்த்துக்கொண்டனர். 1965-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா வழிநடத்திய போராட்டம் போல 1986-ஆம் ஆண்டு, கலைஞர் தலைமையில் ஒட்டுமொத்த தமிழ்நாடும் அணி திரளத் தொடங்கியது. அனைத்துக் கட்சியினர், தமிழறிஞர்கள் ஓர் அணியில் திரண்டனர். இரண்டு சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்து கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நிலையில், தமிழர்களுக்கு இக்கட்டு என்றால், தி.மு. கழகமே களத்தில் நிற்கும் என்பதற்கு, அன்றைக்கு கலைஞர் தலைமை ஏற்ற மொழிப்போராட்டம் சாட்சியாக இருந்தது

கழகத்தின் இந்தத் தீவிர போராட்டத்தின் காரணமாக, 'தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள் தொடங்கப்படாது என்றும், இந்தி கட்டாயமாக்கப்படாது' என்றும் பிரதமர் ராஜீவ் காந்தி நாடாளுமன்றத்தில் உறுதியளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில்தான், 24-11-1986 அன்று சட்டமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்து, அவையிலிருந்து நீக்கிப் பிறப்பித்த உத்தரவு செல்லாது என, உயர் நீதிமன்றத்தில் கழகத்தின் சார்பில் வழக்குத் தொடுக்கப்பட்டது. ஏற்கெனவே, 3 உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில், 22-12-1986 அன்று கூடிய சட்டமன்றம் மேலும் 7 உறுப்பினர்களை நீக்கி, மொத்தம் 10 உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்து தீர்மானம் நிறைவேற்றியதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பேராசிரியர் க.அன்பழகன் மற்றும் தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஏனைய சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பாலன், அ.செல்வராசன், பி.பொன்னுரங்கம், பரிதி இளம்வழுதி, எம்.ராமநாதன், ஆர்.சின்னசாமி, எம்.ஆபிரகாம், சி.ஆறுமுகம் மற்றும் வி.கே.ராஜு ஆகியோர் தனித்தனியாகவும் கூட்டாகவும் உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் (Writ Petitions) தாக்கல் செய்தனர்.

### வானளாவிய அதிகாரம் உண்டா?

சபாநாயகரின் 'வானளாவிய அதிகாரத்' தீர்ப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் அமைந்த இந்த வழக்கு, வரலாற்றுச் சிறப்புமிக்க வழக்காக மாறியது. (W.P. NO: 14189 OF 1986) குறிப்பாக, கழகத்தின் முன்னோடியும், இந்தியாவின் மிகச்சிறந்த சட்ட வல்லுநரும் முன்னாள் ஒன்றிய அரசு வழக்கறிஞருமான வி.பி.ராமன் அவர்களை கழகத்தின் சார்பில் வாதாட நியமித்தார் கலைஞர்.

10 வாரக் கடுங்காவல் தண்டனை பெற்று சிறையில் இருந்தபோதும், தகுதி நீக்கம் செய்யப்பட்ட 10 எம்.எல்.ஏ.க்களின் குடும்பங்களுக்கும், இந்தச் சட்டப் போராட்டத்திற்கான முழு நிதிச்செலவுகளையும், கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட தொண்டர்களின் குடும்பநல நிதியும் வழங்க சிறையில் இருந்தபடியே வழிகாட்டல்களை வழங்கினார் கலைஞர். தவிர, வழக்கை சிறப்பாகக் கையாள, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் 'ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்' (House of Commons) நடைமுறைகள் மற்றும் நாடாளுமன்ற மரபுகளை (May's Parliamentary Practice) ஆராய்ந்து, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க, முரசொலி மாறன் உள்ளிட்ட மூத்த தலை வர்களைக் கொண்டு ஒரு சட்ட ஆவணக் குழுவை அமைத்தார் கலைஞர்.

நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்த போதே, தகுதி நீக்கம் செய்யப்பட்ட 10 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடத்த அரசு திட்டமிட்டது. ஆனால், அப்போது அ.தி.மு.க.வில் நிலவிய உட்கட்சிக் குழப்பம் மற்றும் தோல்விபயம் காரணமாக, இடைத் தேர்தலைச் சந்திக்கத் தயங்கினர். ஆனால் கலைஞர், மக்கள் மன்றத்தில் மிகப் பெரிய அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டு, தகுதிநீக்க நடவடிக்கைக்கு எதிராகப் பொது மக்களின் ஆதரவைத் திரட்டினார்.

இந்த நிலையில், 1987-ஆம் ஆண்டு ஏப்ரல் 16 அன்று, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி சி.ஜெ.சந்துர்கர் தலைமையிலான சென்னை உயர் நீதிமன்ற அமர்வு, 'சட்ட மன்றத்திற்கு ஒரு உறுப்பினரை வெளியேற்றும் அதிகாரம் (Power of Expulsion) உண்டு' என்று கூறி, கழகத்தின் மனுக்களைத் தள்ளுபடி செய்தது. எனினும், இந்த வழக்கின் தீர்ப்பில், சபாநாயகரின் அதிகாரம் குறித்து, நீதிமன்றம் 18 முக்கிய கோட்பாடுகளை (Propositions) அளித்தது.

இந்த வழக்கிற்குப் பின்னர் கழகத்தின் அரசியல் நகர்வுகள், எப்போது தேர்தல் வந்தாலும் தி.மு.க. வெற்றிபெறும் என கழகத்துக்கு ஆதரவான அலையை உருவாக்கி இருந்தது. குறிப்பாக, மொழிப் போராட்டம் என்றால், அதில் சமரசம் இல்லாமல் தி.மு.க. முன்னிலையில் நிற்கும் என்பதை மக்கள் உணர்ந்தனர். அதனால்தான், 1989-ஆம் ஆண்டு ஜனவரியில் நடந்த பொதுத்தேர்தலில், தகுதி நீக்கம் செய்யப்பட்ட பேராசிரியர் க.அன்பழகன், அதே அண்ணா நகர் தொகுதியில் போட்டியிட்டு 30,000 வாக்குகள் வித்தியாசத்தில் பெருவெற்றி பெற்றார். தி.மு.க. 150 இடங்களைக் கைப்பற்றி, 13 ஆண்டுகளுக்குப் பிறகு அமோகமாக ஆட்சியைப் பிடித்தது. அதைவிடவும் முக்கியமான வரலாற்று ஆதாரமெனில், இன்றுவரை இந்தியாவின் ஒட்டுமொத்த மாநிலங்களிலும் நவோதயா பள்ளிகள் இல்லாத ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே ஆகும். இன்று வரை தொடரும் அந்த உறுதிக்குக் காரணம், கழகம் அமைத்த அடித்தளம், கலைஞர் அமைத்த கட்டுமானம்.

> **மொழிப் போராட்டம் என்றால், அதில் சமரசம் இல்லாமல் தி.மு.க. முன்னிலையில் நிற்கும் என்பதை மக்கள் உணர்ந்தனர்.**

...தொடரும்

## மருத்துவக் கட்டமைப்பையும் சிதைக்கிறது, 'நீட்!'

அனிதா மறைந்து 9 ஆண்டுகள் கடந்துவிட்டன, இப்போதும் 'நீட்' தேர்வுக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கிராமப்புற ஏழை-எளிய மாணவர்களின் மருத்துவக் கனவை மட்டும் 'நீட்' சிதைக்கவில்லை, மருத்துவக் கட்டமைப்பையும் சேர்த்தே சிதைக்கிறது. குறிப்பாக, தேசிய சுகாதார ஆய்வறிக்கையின்படி, 2023-ஆம் ஆண்டு மார்ச் நிலவரப்படி, கிராமப்புற சமூக சுகாதார மையங்களில் வெறும் 4 ஆயிரத்து 413 சிறப்பு மருத்துவர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். ஆனால், அங்கு தேவையான மருத்துவர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 964. அதாவது, தேவையில் கிட்டத்தட்ட 80% பற்றாக்குறை நிலவுகிறது என்பது அதிர்ச்சியான உண்மை.

இப்படி மருத்துவர்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு, முக்கிய காரணமே இந்த நீட் தேர்வும், தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்களில் மருத்துவப் படிப்புக்கான இடங்கள் மிகக் குறைவாக இருப்பதும்தான். சில இலட்சங்களில் செலவுசெய்து, நீட் பயிற்சி மையங்களுக்குச் சென்று படிக்கக்கூடிய வாய்ப்புள்ள நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும்கூட, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க இயலாத அளவுக்குக் கட்டணச் சுமை உள்ளது.

அதனால், இந்தியாவைவிட கட்டணம் குறைந்த நாடுகளான ரஷ்யா, பிலிப்பைன்ஸ், ஜார்ஜியா, வங்கதேசம், கஜகஸ்தான், கிர்கிஸ்தானுக்குச் சென்று மருத்துவம் படிப்போர் எண்ணிக்கை, ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துவருகிறது. ஆண்டுதோறும் சுமார் 30ஆயிரம் பேர் இப்படி வெளிநாட்டுக்குச் சென்று மருத்துவம் படித்தாலும், படித்துமுடித்துவிட்டு இந்தியா திரும்பியவுடன், இவர்கள் எஃப்.எம்.ஜி.இ. (FMGE) எனப்படும் தகுதித் தேர்வை எழுதுவது கட்டாயம். ஆனால், வெளிநாட்டுக் கல்விமுறையில் வேறு சூழலில் படித்தவர்கள், இந்தத் தகுதித் தேர்வை வெற்றிகரமாக முடிப்பது, பெரும் சவாலை ஏற்படுத்துகிறது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் இத்தேர்வு நடைபெற்றபோது, 36 ஆயிரத்து 288 பேர் கலந்துகொண்டுள்ளனர். ஆனால், 4 ஆயிரத்து 635 பேரால் மட்டுமே தேர்ச்சி பெற முடிந்தது. இதில் சிலர், ஐந்துக்கும் மேற்பட்ட முறை எழுதித்தான் தேர்ச்சி பெற்றுள்ளனர். பள்ளி இறுதியாண்டு மதிப்பெண் முறையிலேயே மாணவர் சேர்க்கை நடைபெற்றால், இம்மாணவர்களில் பலர் வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. மருத்துவர் பற்றாக்குறையும் ஏற்படாது.

## ஃப்ளாஷ்பேக்



### தொலைபேசி எண்ணே தொகையாக...



ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன்

2009-ஆம் ஆண்டு, அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பில், 20 எழுத்தாளர்கள் ரூ.5 ஆயிரம் வீதம் நிதி சேர்த்து, ஒரு இலட்சம் ரூபாயை இலங்கைத் தமிழர் நல நிதிக்கு, அன்றைய முதல்வர் முத்தமிழறிஞரைச் சந்தித்து வழங்கினோம். எழுத்தாளர்களின் பங்களிப்பை அவர்களின் பெயர், தொலைபேசி எண்ணுடன் பட்டியலாக, கலைஞரிடம் அளித்தோம். அதைப் பார்த்த தலைவர், தொலைபேசி எண்ணை, பத்து இலக்க தொகையைப் போல வாசித்து, அவ்வளவு தொகையை ஒவ்வொருவரும் அளிக்கிறீர்களா எனக் கேட்டார். அவ்வளவு தொகை கொடுக்கிறோம் என்றால், நாங்கள் அந்தத் தீவையே விலைக்கு வாங்கிவிடுவோமே என்றோம். அந்த நேரம், அவரது நகைச்சுவை உணர்வு சந்திப்பையே அற்புதமாக்கியது.

**– கலைமாமணி ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## ம்லருக

### குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மை!

1977-ஆம் ஆண்டு தமிழகத்தில் நெருக்கடி நிலை காலத்தில், 'மிசா' கைதிகளுக்கு எதிராக, சென்னை மத்திய சிறைச்சாலையில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் சித்ரவதைகளை விசாரிக்க, 'இஸ்மாயில் கமிஷன்' அமைக்கப்பட்டது. சிறை அதிகாரிகள் மற்றும் வார்டன்களின் கொடூரமான அத்துமீறல்கள் குறித்து, ஆதாரங்களுடன் கழகத்தினர் சாட்சியம் அளித்தனர். அதன் அடிப்படையில், 'சிறை அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகள் உண்மை' என கமிஷன் தனது அறிக்கையில் உறுதி செய்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900